## இழப்புக்கான எதிரீடுகள் தொடர்பில் அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள்

### 1) இழப்புக்கான எதிரீடுகள் என்றால் என்ன?

பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் அல்லது அவற்றை தடுப்பதற்கு தவறியதன் காரணமாக ஏற்படுகின்ற விளைவுகளை சரிசெய்வதற்காக அரசு அல்லது தனிநபர்கள் அல்லது குழுவினுடைய சட்ட கடமைப்பாடுகளுக்கு பதிலளிக்கின்ற அளவீடே இழப்புக்கான எதிரீடுகள் ஆகும். இழப்புக்கான எதிரீடுகள் பொருள் மற்றும் சின்னமாக, தனியாக மற்றும் கூட்டாக காணப்படுவதுடன், நிதிசார் நட்டஈடுகளையும் உள்ளடக்கி இருக்கலாம். மேலும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை மீளக் கொண்டு வருதல், நீதிக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களை இல்லாமல் செய்தல், பௌதீக புனர்வாழ்வு, இடத்தை அடைவதற்கு அனுமதித்தல், சுகாதார பராமரிப்பு மற்றும் கல்வி என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. சில வேளைகளில், இந்த அளவீடுகள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. அனேகமாக, வன்முறைகளின் நீடித்த பராமரிப்புக்களை வெற்றி கொள்வதற்கான சிறந்த வசதியாக சிறப்பான எதிர்காலத்தை பிள்ளைகளுக்கு வழங்குகின்றது.

### 2) ஏன் இழப்புக்கான எதிரீடுகள் அவசியமாவை?

பாதிப்புற்றோருக்கும், சமூகத்திற்கும் அரசு இழப்புக்கான எதிரீடுகளை வெளிப்படுத்துகின்ற போதிலும், பொதுவாக அரசு கடந்த கால வன்முறைகளுக்கான அடிப்படை காரணங்களை தீர்ப்பதற்கும், மீண்டும் அவை இடம்பெறாதிருப்பதை உறுதி செய்வதற்கும் இவை அவசியமாகின்றன. அதேவேளை, போரின் முடிவானது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீடித்த வலியும், வேதனையும் முடிவுற்றதாக கருத முடியாது. வித்தியாசமான பின்னணிகளைக் கொண்ட இலங்கையர்கள் பலர் இப்பொழுதும் பௌதீக குறைபாடு, உளவியல் தாக்கம், சொத்து இழப்பு, வறுமை, ஒதுக்கப்படுதல் மற்றும் ஏனைய வடிவங்களிலான பாதிப்புக்களை உள்ளடக்கிய வன்முறைகளின் தாக்கங்களினால் வருந்துகின்றனர். இழப்புக்கான எதிரீடுகள் நீடித்த வேதனைகளை நீக்குவதற்கான முறைமையாக காணப்படுகின்றன. ஆனால், முழு சமூகங்களையும் வலுவூட்ட முடிவதுடன் அவர்கள் உரிமைகள் கொண்டவர்களாகவும், சம அந்தஸ்த்துள்ள பிரசைகளாகவும் அவர்களை மீள நிலைக்கு கொண்டு வரவும் முடிகின்றது.

### 3) வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு இழப்புக்கான எதிரீடுகள் உதவுகின்றன?

பாதிக்கப்பட்டவர்கள் இழப்புக்கான எதிரீடுகளுக்கான உரிமையை கொண்டிருப்பதுடன், இது ஒரு இரக்கப்படும் விடயமன்றி வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் மீதான அரசின் சட்ட கடப்பாடாகும். உரிமைகளை நிறைவேற்றுவதில், பின்வருவனவற்றை அடைந்து கொண்டதற்காக இழப்புக்கான எதிரீடுகள் வன்முறைகளின் பாதிப்பை தீர்த்து வைக்கின்றது.

- ✓ உடனடி இன்னலை குறைத்தல் - ஏழைகளுக்கும், விரைவாக பாதிப்படையக்கூடியவர்களுக்கும் அடிப்படை தேவைகளையும், உதவியையும் வழங்குதல் (உதாரணம்: அங்கவீனமுற்ற நபர்கள் அல்லது அடிப்படையான வருமான உழைப்பாளர் காணாமல் போன அல்லது இறந்த குடும்பத்தினர்)
- ✓ கட்டமைக்கப்பட்ட வன்முறையை அடையாளம் காண்பதும், நீக்குதலும் - ஒதுக்கப்பட்ட குழுவினருக்கு எதிரான நீண்டகால பிரிவினையை ஏற்றுக்கொள்ளலும், தீர்வு காணலும் (உதாரணம்: நிலம், சுகாதாரம், கல்வி, மொழி போன்றவற்றை மறுத்தல் தொடர்பான செயற்பாடுகளையும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளையும் ஏற்றுக் கொள்ளலும், தீர்வு காணலும்)
- ✓ திருப்பியளித்தல் - மக்களை தமது பழைய நிலைமைகளுக்கு மீண்டும் கொண்டு வருதல் (உதாரணம்: நிலம், சொத்து அல்லது வாக்குரிமை மற்றும் இடம்பெயர்ந்தவர்களுக்கான பிரஜாவுரிமை போன்ற அடிப்படை உரிமைகளை மீள வழங்குதல்)

- ✓ நீதி வழங்குதல் - பொருள் மற்றும் அடையாள நன்மைகள் பாதிப்புற்றோருக்கு மிகவும் முக்கியமானதாகும். ஏனென்றால், அவை எப்பொழுதும் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான நேரடி மற்றும் கருத்துடைய வழியாகக் காணப்படுகின்றன.

**4) அரசினால் எவ்வாறு இழப்புக்கான எதிரீடுகளை மேற்கொள்ள முடிகின்றது?**

இழப்புக்கான எதிரீடுகளின் வடிவங்கள் தொடர்பான சுருக்கமான கொள்கைகளையும், நியதிகளையும் எதிர்காலத்தில் அமையவுள்ள இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம் விருத்தி செய்யும். இவ்வாறு செய்வதில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்புக்கான எதிரீடுகளை மேற்கொள்வதற்கான சட்ட கடமைப்பாட்டை அடையாளம் கண்டு கொள்வதில் அரசு பின்வருவனவற்றை உள்ளடக்கி பல்வேறு வடிவங்களிலான இழப்புக்கான எதிரீடுகளை வழங்க முடியும் என இது கூறுகின்றது.

- இழப்புக்கான எதிரீடுகளை திருப்பியளித்தல் - வன்முறை இடம்பெற முன்னுள்ள உரிய நிலையில் அவர்களது வாழ்வை திருப்பியளித்தல் (சுதந்திரம், அடையாளம், பிரஜாவுரிமை, ஆதனம் போன்றவற்றை திருப்பியளித்தல்)
- நட்டஈடு - நிதி ரீதியாக அளவிடக்கூடிய இழப்புக்களுக்கு நிதியளித்தல்
- புனர்வாழ்வு - மருத்துவ மற்றும் உளவியல் பராமரிப்பு, சட்டம் மற்றும் சமூக சேவைகள், வன்முறைகளின் தாக்கத்திலிருந்து ஏற்பட்ட கல்வி மற்றும் ஏனைய தேவைகள் போன்றவற்றுக்கான ஏற்பாடுகள்
- திருப்தி - அட்டூழியங்கள், வெளிப்படையான மன்னிப்புக்கள், உண்மைக்கான தேடல் போன்றவற்றை ஏற்றுக்கொள்ளுதல்
- மீள நிகழாமைக்கான உத்தரவாதம் - மீள நிகழ்கின்றமையை தடுப்பதற்கான சட்ட மற்றும் கலாச்சார மறுசீரமைப்பு

**5) தனியான மற்றும் கூட்டான இழப்புக்கான எதிரீடுகளுக்கிடையிலான வேறுபாடு என்ன?**

பாதிக்கப்பட்ட வெள;வேறுபட்ட தனிநபர்கள் வித்தியாசமான தேவைகளைக் கொண்டிருப்பார்கள். ஏனெனில், அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட வன்முறைகளின் பாதிப்பு வித்தியாசமாக இருப்பதனால் அகும். உதாரணமாக, காணாமலாக்கப்பட்ட நபர்களின் குடும்பங்கள், எனைய பாதிக்கப்பட்டோருக்கு தேவைப்படுகின்ற பொருள்சார் இழப்புக்கான எதிரீடுகளை ஒத்த தேவை காணப்படும். ஆனால், காணாமல் போனமை தொடர்பான விளைவுகளை சீர்படுத்திக் கொள்வதற்கு தனிப்பட்ட அளவீடுகளும், சட்ட அளவீடுகளும் நன்மை பயக்கும். தனிப்பட்ட இழப்புக்கான எதிரீடுகளின் வகையானது பாதிப்புற்றோரின் பொருளாதார அல்லது சமூக வகுப்பு, பால், வயது மற்றும் அடையாளம் என்பவற்றுக்கேற்ப வேறுபடலாம். அவர்களுடைய அனுபவங்கள் பாலியல் ரீதியான வன்முறைகளின் விளைவுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதில்லை. ஆனால், அனேகமாக தனது துணையின் விதியின் காரணமாக தனியாக வருமானம் உழைப்பவராக இருக்கும் நிலையில் இவை பொருளாதார மற்றும் சமூக சுமைகளை உள்ளடக்கியிருக்கும்.

கூட்டான இழப்புக்கான எதிரீடுகள் திட்டமிட்ட வகையில் இலக்கு வைக்கப்பட்ட குழுக்கள், சமுதாயங்கள் மற்றும் பிரதேசங்கள் போன்றவற்றுக்கான தேவைகளை நிவர்த்தி செய்வதை குறிக்கோளாகக் கொண்டது. ஒரே பிரதேசம் அல்லது சமுதாய ரீதியான அல்லது ஒரே மாதிரியான அடையாளம் அல்லது வன்முறைகளின் அடையாளங்களைக் கொண்ட மக்களுக்கு ஏற்பட்ட வன்முறைகளின் விளைவுகளையும், அதன் காரணங்களையும் தீர்ப்பதை நோக்காகக் கொண்டது.

இழப்புக்கான எதிரீடுகள் தொடர்பான கொள்கைகளை வடிவமைப்பதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில், தனிப்பட்ட இழப்புக்கான எதிரீடுகள் மனிதாபிமான நிவாரண நிகழ்ச்சித் திட்டங்களுடன் இடைவினை ஏற்படுத்துகின்றன. அத்துடன் கூட்டான இழப்புக்கான எதிரீடுகளுக்கான வடிவமைப்பும், விநியோகமும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுடன் இடைவினையாற்றலாம்.

அவ்வாறான மேலமைவு தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஏனெனில், மனித உரிமைகள் தொடர்பான வன்முறைகளுக்கு இலகுவாக பாதிப்படையக்கூடிய பலர் சமூகத்தில் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் மிகவும் பலவீனமானவர்களாக இருப்பார்கள்.

**6) இழப்புக்கான எதிரீடுகளுக்கு தகுதியானவர்கள் யார்?**

இழப்புக்கான எதிரீடுகளானவை பாதிக்கப்பட்டோரின் இனம் அல்லது மத பின்னணி, அல்லது ஏதேனும் குறிக்கப்பட்ட அரசியல் குழுவுடனான தொடர்பு போன்றவற்றின் அடிப்படையில் வழங்கப்படுவதில்லை. மேலும், பின்வரும் வகையில் பாதிப்புற்றோராக உள்ள 'இடருற்ற நபர்கள்' என்பவர்களுக்கு இழப்புக்கான எதிரீடுகள் அளிக்கப்படல் வேண்டுமென நிர்ணயிக்கின்ற சட்டத்தின் கீழ் அனைத்து இலங்கையர்களும் சமம்.

- மனித உரிமைகள் அல்லது மனிதாபிமான சட்டத்தை மீறுதல் (1949ஆம் ஆண்டு ஜெனீவா சாசனத்தின் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் பிரிவுகளில் உள்ளடங்கியுள்ளவாறு)
- அத்தகைய மீறுதல்களின் விளைவால் கொல்லப்பட்ட அல்லது காணாமல் போன நபர்களின் குடும்பங்கள்

இந்த சட்டத்தின் கீழ் இழப்புக்கான எதிரீடுகளை பெறுவதற்கு தகுதியுடையவராக இருப்பதற்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில், இடருற்ற நபர்கள் பின்வருவன காரணமாக அல்லது தொடர்பாக துன்பப்பட்டிருத்தல் வேண்டும்.

- ✓ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல் அல்லது பின்விளைவு;
- ✓ அரசியல் அமைதியின்மையுடன் தொடர்பான அல்லது சிவில் குழப்ப நிலைகள்; அல்லது
- ✓ இலங்கை மக்கள் சமூகத்தினர் அல்லது குழுக்கள் அல்லது தனிப்பட்டவர்களின் திட்டமிடப்பட்ட வன்முறைகள் காரணமாக; அல்லது
- ✓ 2018ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்பட்டோரை எல்லா நபர்களையும் பாதுகாத்தல் சட்டத்திற்கான சர்வதேச சாசனத்தில் விபரிக்கப்பட்டுள்ளதற்கு அமைய வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுதல் காரணமாக

**7) பாதிக்கப்பட்டோருக்கு இலங்கை இழப்புக்கான எதிரீடுகளை அளிப்பது இதுதான் முதல் தடவையா?**

இழப்புக்கான எதிரீடுகள் இலங்கைக்கு புதியவை அல்ல. நபர்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனருத்தாரனம் அதிகாரசபை, மோதல்களின் போது அல்லது இயற்கை அனர்த்தங்களின் போது பாதிப்புக்குள்ளானவர்களை சீர்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் அடைந்து கொள்வதற்கும், அவர்களுடன் கலந்தாலோசிப்பதற்கும், மற்றும் பொருத்தமான தனிப்பட்ட மற்றும் கூட்டான இழப்புக்கான எதிரீட்டு வடிவங்களை நிறுவுவதற்கும் தேவையான ஆற்றலை வலுப்படுத்திக் கொள்வதற்கு இது தகுந்த நேரமாகும். இழப்புக்கான எதிரீடுகள் தொடர்பான புதிய சட்டம் ஒரு சுயாதீனமான அதிகாரசபை - இழப்புக்கான எதிரீடுகளுக்கான அலுவலகம் - ஒன்றை ஸ்தாபிக்கவுள்ளது. இவ் இழப்புக்கான எதிரீடுகளை இன, மொழி, மதம், பால் மற்றும் ஏனைய எல்லா பின்னணி காரணமான எந்தவொரு பாகுபாடுமின்றி எல்லா இடருற்ற நபர்களும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். இந்த அதிகாரசபையானது சிறப்பான மற்றும் மிகவும் பரந்தளவான இழப்புக்கான எதிரீட்டு வடிவத்தை தீர்மானிக்கவுள்ளது. இதன் பொருட்டு இவ் அதிகாரசபை வன்முறைகளின் கனம், தேவைகளின் வகை, அரசின் கொள்திறன் மற்றும் மிக அதிகமாக ஒதுக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான விசேட தேவை போன்றவற்றை கவனத்தில் எடுக்கின்றது.

கடந்தகால இழப்புக்கான எதிரீடுகளின் அனுபவங்களைக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் ஏமாற்றமும், அதிருப்தியும் இருந்து வருகின்றன. ஆலோசனை செயலணியின் அறிக்கைக்கு அமைய,

நிர்வாக நடைமுறையில் காணப்படும் பற்றாக்குறை காரணமாக இழப்புக்கான எதிரீடுகளுக்கான வாக்குறுதி தடைகளையும் / அல்லது பக்கச்சார்பினையும் எதிர்நோக்கியிருக்கின்றது.

அ) சில சந்தர்ப்பங்களில், இழப்புக்கான எதிரீடுகள் வேண்டுமென்றே மறுக்கப்பட்டும், தாமதப்படுத்தப்பட்டும் அல்லது செலுத்தப்படாமலும் இருந்துள்ளது. இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்படாமை, தாமதங்கள், மீளப்பெறுவதில் மறுப்பு போன்றவற்றுக்கு உட்பட்ட பாதிக்கப்பட்டோர், கொள்ளையடிக்கப்பட்ட அல்லது எரிக்கப்பட்ட தமது வீடுகளை விட்டு வலுக்கட்டாயமாக வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டோர், மீள்குடியேற்ற நிவாரண உதவி கிடைக்காத அல்லது மீளவருவோருக்கான வீட்டுத் திட்டத்தை அணுக முடியாத இலங்கைக்கு திரும்பி வருகின்ற அகதிகள் மற்றும் தற்பொழுதும் வதிவிடம் தேவைப்படுவோர், தமது சொந்த நிலத்திற்கான ஆவணங்கள் அழிவடைந்த இடம்பெயர்ந்துள்ள தனிநபர்கள் மற்றும் தமது சொந்த நிலத்தை இப்பொழுதும் பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமித்திருக்கும் தனிநபர்கள் போன்றோர் இந் நிலைமையில் உள்ளடங்கியிருக்கின்றனர்.

ஆ) நட்டஈட்டில் காணப்படும் போதுமற்ற தன்மை இரு அம்சங்களில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில், வழங்கப்பட்ட நட்டஈடு ஏற்பட்ட இழப்புக்கு போதுமானதாக இருந்ததில்லை.

இ) நட்டஈடு கணிப்பிட்டதன் மற்றும் வழங்கியதன் அடிப்படை / நியதிகள் தொடர்பான விளக்கத்தில் பொதுவாக குறைபாடு இருந்துள்ளது

ஈ) சில குழுக்களின் காயங்கள் மற்றும் இழப்புக்கள் அடையாளம் காணப்படவில்லை அல்லது அவை வெளிப்படையாக தெரியாத காரணத்தினால் அதிகார சபையினால் போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை. உள்ளார்ந்த / மறைவான உடல் காயங்கள், உளவியல் தாக்கம், பாலியல் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டோர், இலகுவில் பாதிக்கப்படக்கூடிய மற்றும் சுதேச சமூகங்கள் போன்றவற்றை இது உள்ளடக்குகின்றது.

உ) அலுவலர்களால் வற்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல் என்பன அறிக்கையிடப்பட்ட பிரச்சினையாகவே இருந்துள்ளது.

**8) இழப்புக்கான எதிரீடுகளை ஏற்றுக்கொள்வது பாதிக்கப்பட்டோர் உண்மை மற்றும் நீதியைப் பெற்றுக்கொள்வதைத் தடுக்குமா?**

கடந்த காலத்தில் இழப்புக்கான எதிரீடுகளை ஏற்றுக் கொள்வதற்கு சில மறுப்புக்களும், ஆட்சேபனைகளும் இருந்துள்ளன. தனிப்பட்டவர்கள் அல்லது குடும்பங்கள் இழப்புக்கான எதிரீடுகளை ஏற்றுக்கொள்ள விரும்பாதது இதன் காரணமாகவல்ல, ஆனால் அவர்கள் ஏற்றுக்கொண்டால் உண்மை மற்றும் நீதிக்கான பாதைகளை தாம் இழந்து விடுவோம் என்ற பயத்தின் காரணமாகும்.

- சில குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்களின் இழப்பு / காணாமற்போதலை எதிர்நோக்கியுள்ளனர். இவர்கள் என்ன நடந்தது என்ற உண்மை வழங்கப்படும் வரை இழப்புக்கான எதிரீடுகளை விரும்பவில்லை. அவர்கள் இழப்புக்கான எதிரீடுகளை ஏற்றுக்கொள்வது நட்டஈட்டுக் கொடுப்பனவாகவும், இழப்பை ஏற்றுக்கொள்வதாகவும் தேடுதலை கைவிடுவதாகவும் கருதப்படலாம் என அஞ்சுகின்றனர்.

- சில குடும்பங்கள் இழப்புக்கான எதிரீடுகளை ஏற்றுக்கொள்வதற்கு மறுக்கின்றனர். அவ்வாறு செய்யின் அது புரியப்பட்ட குற்றங்களுக்காக நீதியை பெற்றுக்கொள்வதைத் தடுக்கும் என கருதுகின்றனர்.

எவ்வாறாயினும், இவ்வாறு பாதிக்கப்பட்டோர் தமது அடிப்படை தேவைகளான உணவு, வதிவிடம், வாழ்வாதாரம் போன்றவற்றை அடைந்து கொள்வதற்காக இழப்புக்கான எதிரீடுகளுக்கான உடனடி மற்றும் அவசரமான தேவையை எதிர்நோக்குகின்றனர் என்பதற்கு இது ஆதாரமாக உள்ளது.

இழப்புக்கான எதிரீடுகள் தொடர்பான சட்டம் துன்புற்றோர் தமது உண்மை, நீதியை தேடுவதற்கான உரிமையை இழந்து விடுவர் என்ற வகையில் அமையவில்லை. இழப்புக்கான எதிரீடுகளை பெற்றுக்கொள்ளுதல் எந்தவொரு நபரும் நீதிமன்றில் உண்மையை தேடுவதற்கு தடையாக அமையாது. காணாமல் போனோர் அலுவகத்துடன் இணைந்து காணாமல் போனோரின் உறவினர்கள் தமது விதி பற்றிய உண்மையை தேடுவதற்கு தமக்குள்ள உரிமையை உறுதி செய்யும் முகமாக இழப்புக்கான எதிரீடுகள் தொடர்பான அதிகார சபை ஒத்துழைப்பை வழங்கும். வன்முறைகள் காரணமாக பாதிக்கப்பட்ட சகல இலங்கையருக்கும் அதிகளவு நீதியை இழப்புக்கான எதிரீடுகள் சட்டம் வழங்கும்.